
தமிழ்!
பிள்ளைத் தமிழ்!!

மெ. சண்முகம்



தமிழ்!
பிள்ளைத்தமிழ்!!

ஆக்கம்

மெ.சண்முகம், B.Sc.,B.Ed.,

'ஓடாப்புலி நிவாஸ் 2020'

94, மெ.மெ. வீதி,காரைக்குடி – 630 001.

அலைபேசி எண்கள் : 9976402342, 8248748170

மணிவாசகர் பதிப்பகம்

31, சிங்கர் தெரு, பிராட்வே,

சென்னை - 600 104.

முதல் பதிப்பு : மார்ச் 2022
திருவள்ளுவர் ஆண்டு : 2053
உரிமை : ஆசிரியர்க்கு

விலை : ரூ. 50.00

மணிவாசகர் பதிப்பக வெளியீட்டு எண் : 3086
ஒளி அச்சு : அருண் மோனேஷ்

நினைவில் வாழும்
நிறுவனர்

ச. மெய்யப்பனார்



டாக்டர் ச. மெய்யப்பன், அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தமிழ்ப் பேராசிரியர்.

பல்கலைக்கழகங்கள் பலவற்றில் இவர் அறக்கட்டளைகள் நிறுவியுள்ளார்.

'வள்ளுவம்' இதழின் நிறுவன ஆசிரியர்.

குன்றக்குடி அடிகளார் '**தமிழவேள்**' என்றும், தருமபுரம் ஆதீனத் தலைவர் '**செந்தமிழ்க் காவலர்**' என்றும் விருதுகள் வழங்கிச் சிறப்பித்துள்ளனர்.

'**பதிப்புச் செம்மல்**' என அறிஞர்கள் இவரைப் பாராட்டுவர்.

கிடைக்குமிடங்கள்:

மணிவாசகர் நூலகம்

12-B, மேலச் சன்னதி, சிதம்பரம் - 608001. ☎:04144-222856
31, சிங்கர் தெரு, பிராட்வே, சென்னை - 600104. ☎:044-25361039
6, சிவஞானம் தெரு, தி.நகர், சென்னை - 600017. ☎:044-24357832
110, வடக்கு ஆவணி மூலவீதி, மதுரை - 625001. ☎:0452-4231151
15, இராஜ வீதி, கோயமுத்தூர் - 641001. ☎:0422-2397155
296/134, செரி சாலை, சேலம் - 636007. ☎:0427-4262992
28, நந்தி கோவில் தெரு, திருச்சி - 620002. ☎:0431-2706450

அச்சிட்டோர் : மணிவாசகர் ஆப்செட் பிரிண்டர்ஸ், சென்னை – 600 021, தொலைப்பேசி : 25954528



என்னுரை

செம்மொழியாம் தமிழ் விளங்கும் பாண்டிவள நாட்டில் மொழியை இறையாக்கி முதன்முதலில் கோயில் கொண்ட காரைக்குடியில் தமிழ்த்தாய் மகனாகப் பிறந்து, பல்லாயிரம் ஆண்டு தொன்மை கொண்ட அத்தாயைப் பிள்ளையாக நினைந்து, வழக்கமான பெண்பாற்பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப் பருவங்களோடு, கணினி, செம்மொழி என்ற 2 புதுப்பருவங்களையும் சேர்த்து, தமிழ் உயிரெழுத்துப் பன்னிரண்டு போல 12 பருவங்கள் வைத்து, ஒவ்வொரு பருவமும் அந்த உயிரெழுத்தையே முதல் எழுத்தாகக் கொண்டு பத்துப்பாடல்களும் அமைவதாகப்பாடி உள்ளேன்.

இதில் தமிழின் பன்னெடுஞ் சிறப்பையும் தமிழகத்தின் இயற்கை வளத்தையும் பெருமையையும் நம் தமிழரின் வாழ்வியலையும் தேவையையும் எவ்விதப் பாகுபாடுமின்றிக் கூறியுள்ளேன்.

நான் மேற்படிப்புக்காகத் தயாரித்து வைத்த ஆய்வுக் கருத்துகளை, 'மன்னரை முந்தியோர்' என்ற நூலாக 17.7.2005ல் வெளியிட்டதை அனைவரும் ஏற்றுக்கொண்டது போல, நம் தாய் மொழிக்கு எழுசீர் ஆசிரிய விருத்தத்தில் நான் பாடியுள்ள இப்பிள்ளைத் தமிழ் நூலையும் ஏற்றுக்கொண்டு, பிழைகள் இருந்தால் பொறுத்தருள வேண்டுகிறேன்.

நான், காரைக்குடியில் ஆரம்பக்கல்வி பயின்ற பொழுது, என் கல்விக் கண் திறந்த சிவன்கோவில் நகர்மன்ற ஆரம்பப் பள்ளி ஆசிரியர் இயற்கையிற் கலந்த உயர்திரு. சிலுவை மாணிக்கம் அவர்களை வணங்கியும், காரைக்குடி ஸ்ரீ மீனாட்சி சுந்ரேசுவரர் ஆண்கள் உயர்நிலைப் பள்ளியில் பயின்றபொழுது எனக்குத்

தமிழின்மீது முதன்முதலில் தீராக்காதலை ஏற்படுத்திய இயற்கையிற் கலந்த தமிழாசிரியர் புலவர் உயர்திரு ஆ.பழநி அவர்களை வணங்கியும் காரைக்குடி அழகப்பா மாதிரி மேல்நிலைப் பள்ளியில் மேல்நிலை வகுப்புப் பயின்றபொழுது, தமிழாசிரியாக இருந்து, எனக்குத் தமிழ் தந்த ஆசிரியர் அய்யா உயர்திரு. முருகையன் அவர்களை வணங்கியும் தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியல் 1985–88 கல்வியாண்டில் நான் B.Sc., Zoology படித்து, கல்லூரி முதல் மாணவனாகத் தேர்ச்சிபெற்ற காலத்தில் தமிழ்த்துறைத் தலைவராகவும் பேராசிரியராகவும் இருந்து எனக்குத் தமிழூட்டிய இயற்கையிற் கலந்த உயர்திரு. மகாகவி அர.சிங்காரவடிவேலன் அவர்களை வணங்கியும் எனக்குத் தமிழ் இலக்கணத்தைப் புத்தக வாயிலாக அள்ளித்தந்த மதுரைக் காமராசர் பல்கலைக்கழக முன்னைத் தமிழ்த் துறைத்தலைவர் இயற்கையிற் கலந்த உயர்திரு. தமிழண்ணல் (இராம.பெரியகருப்பன்) அவர்களை வணங்கியும் இந்நூலுக்கு வாழ்த்து மடல் வழங்கியவரும் எனக்குக் காரைக்குடி அழகப்பாக் கல்வியியல் கல்லூரியில் பேராசிரியராகவும், துறைத் தலைவராவும் இருந்து ஓய்வு பெற்ற உயர்திரு. மா.கண்ணப்பன் அவர்களை வணங்கியும் மேலும் அணிந்துரை வழங்கிய தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு. வி.திருவள்ளுவன் அவர்களை வணங்கியும் வாழ்த்துரை கள் வழங்கிய சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழகத் துணைவேந்தர் உயர்திரு.இராம. கதிரேசன் அவர்களை வணங்கியும் திருவாரூர் மத்தியப் பல்கலைக்கழகத் தமிழ்த் துறைத் தலைவர் பேராசிரியர் உயர்திரு. ச.இரவி அவர்களை வணங்கியும் மதிப்புரை வழங்கிய திருவாடானைக் கலை மற்றும் அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைத் தலைவரும் பேராசிரியரும் காரைக்குடிக் கம்பன் கழகச் செயலருமான நண்பர் உயர்திரு. மு.பழனியப்பன் அவர்களை வணங்கியும் இந்நூலைப் பதிப்பிக்க உறுதுணையாக இருந்த மணிவாசகர் பதிப்பக உரிமையாளர் உயர்திரு. ச.மெ.மீனாட்சி

சோமசுந்தரம் மற்றும் மேலாளர் உயர்திரு. இராம.குருமூர்த்தி அவர்களை வணங்கியும் இந்நூலை வெளியிட உறுதுணையாக இருந்த காரைக்குடிக் கம்பன் கழகத் தலைவர் உயர்திரு பழ. பழனியப்பன் அவர்களை வணங்கியும் எனக்குப் பலவிதத்தில் உறுதுணையாக இருந்த என் மனைவி ச.நாச்சம்மை B.Com., மகன் மெ.ச.மெய்யப்பன் B.E., M.B.A., மறுமகள் மெ.ரேவதி B.Com., M.B.A., உதவியோடும் பிள்ளைக்கவிபாடும் செல்வத்தை எனக்கீந்த எனையீன்ற இயற்கையிற் கலந்த என் பெற்றோர் உயர்திரு. ஓ.ராம.மெ.சுப. மெய்யப்பன், முத்தாத்தாள் திருவடிகளை வணங்கியும் எல்லோருடைய வாழ்த்துகளோடும் இத்தமிழ்! பிள்ளைத்தமிழ்!! மலரை நம் தமிழ்த் தாய் திருவடிகளில் அணிவித்து மகிழ்கின்றேன்.


அனைவருக்கும் என் நெஞ்சார்ந்த நன்றியை உரித்தாக்கு கின்றேன்.

நன்றி
மெ. சண்முகம் B.Sc.,B.Ed.,
அலைபேசி 9976402342,
8248748170.

'ஒடாப்புலி நிவாஸ் 2020'
94, மெ.மெ.வீதி
காரைக்குடி – 630 001.

மெய்யப்பா அடகுக்கடை
'நாச்சம்மை இல்லம்'
83/H.1 திருவாரூர் ரோடு
லெட்சுமாங்குடி – 614 102.

நூல் வெளியீடு 17.03.2022



அணிந்துரை

முனைவர் வி.திருவள்ளுவன்
துணைவேந்தர்
தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர் – 613 010.
தமிழ்நாடு, இந்தியா

தமிழ்க் கவிதை மரபிற்கு நீண்ட நெடிய வரலாறு உண்டு. தொல்காப்பியம், சங்க இலக்கியங்கள், கீழ் கணக்கு நூல்கள், காப்பியங்கள், பக்தி இலக்கியங்கள், சிற்றிலக்கியங்கள் என நீண்டு கொண்டிருக்கும் இலக்கியங்களை வளப்படுத்தியது மரபுக்கவிதை, மரபுக்கவிதைக்கு நிலை பெற்று விடுகிற, மந்திர சக்தி உண்டு.

தமிழ்ப் படிக்கும் மாணவர்களுக்கும் புதுக்கவிதை மட்டுமே சொல்லித் தருவதில்லை. மாறாக மரபுக்கவிதைகளால் ஆன பழைய இலக்கியங்களைக் கற்றுத் தருகிறோம். அதற்கான காரணங்கள் உண்டு. 1. மரபினை அறிந்து கொள்ளுதல் 2. சொல்லக் கூடிய விசயத்தை நுணுக்கமாகவும் சுருக்கமாகவும் சொல்லுதல். மரபுக் கவிதையின் செழுமையை நாம் இன்னும் உணர்ந்து கொண்டிருக்கிறோம். வாசித்து அனுபவித்துக் கொண்டிருக்கிறோம். தமிழில் நவீனக் கவிதைகள் மட்டுமே எழுதப் பட்டுக்கொண்டிருக் கின்றன என்ற தவறான புரிதல் உண்டு. மரபுக் கவிதைகளும் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதற்கான தனித்த வாசகர் வட்டம் உண்டு.

தமிழில் தனித்து வாசிக்க மன்னரை முந்தியோர் என்ற நூலை எழுதிய மெ.சண்முகம் அவர்கள் தமிழ் பிள்ளைத் தமிழ் என்ற மரபுக் கவிதை நூல் எழுதியுள்ளார். தனித்துவ மிக்க பிள்ளைத் தமிழ் நூலாக இந்நூல் உள்ளது.

பெண்பாற்பிள்ளைத் தமிழ் பெற்றுள்ள பத்துப் பருவங்களுடன் கணினிப் பருவம், செம்மொழிப் பருவம் என இரண்டு

பருவங்களைச் சேர்த்து பன்னிரண்டு பருவங்களில் பாடியுள்ளார். மொத்தம் 121 செய்யுள்களைப் பாடியுள்ளார்.

எழுசீர் ஆசிரிய விருத்தத்தில் பாடப்பட்ட இப்பிள்ளைத் தமிழ் மிக எளிமையாகப் பாடப்பட்டுள்ளது. மேலும் காப்புச் செய்யுளில் இயற்கையைப் பாடியிருப்பதும் கடவுளைத் தவிர்த்திருப்பதும் பாராட்டிற்குரியது.

அம்புலிப் பருவம் பாடுவது பிள்ளைத்தமிழ் நூல்களில் சிரமம். ஆனால் அதனையும் மிகச் சரியாக சாம, பேத, தான, தண்டம் முறைகளில் மிகச் சரியாக ஆசிரியர் பாடியுள்ளார்.

பல்வேறு பாடல்கள் மிக அற்புதமான சொல்லாட்சிகளால் மிளிர்கின்றன. முத்தப்பருவத்தில் இரண்டாம் பாடலில் உழவு குறித்துச் சொல்லுமிடம் அழகாக சித்தரிக்கப்பட்டுள்ளது.

தொழிலோப லகோடி ஆயினும் உழவே
தொடக்கம் பலவும்அ டக்கம்

எனக் கூறப்பட்டுள்ளது. சொற்களை நிதானமாகவும் அழகாகவும் பொருத்தமாகவும் கையாண்டிருப்பது பாராட்டுக்குரியது. மரபின் செழுமையை பல்வேறு கவிதைகளில் தரிசிக்க முடிகின்றது. மரபுக் கவிதையில் அமைந்த இந்தத் தமிழ்ப் பிள்ளைத் தமிழ் வாசிப்பதற்கு எளிமையாக இருக்கின்றது. சிறப்பாக புரிந்து கொள்ளவும் முடிகின்றது. ஆனாலும் எல்லோராலும் பயன்படுத்தும் வண்ணம் இந்நூல் உரையோடு வெளிவந்தால் இன்னும் பலரால் கொண்டாடப்படும். இப்பிள்ளைத்தமிழ் நூல் போல பல மரபுக்கவிதை நூல்களை ஆசிரியர் சண்முகம் அவர்கள் படைத்து தமிழ் உலகிற்கு அளிக்க வேண்டுமென வாழ்த்துகிறேன்.

19.2.22

(வி.திருவள்ளுவன்)



அண்ணாமலைப் பல்கலைக்கழகம்
ANNAMALAI UNIVERSITY
(State University-Accredited with A Grade by NAAC)
ANNAMALAINAGAR - 608 002 CHIDAMBARAM TAMIL NADU INDIA

Prof. RM. KATHIRESAN, M.Sc.Ag., Ph.D., D.Sc
VICE-CHANCELLOR

24.02.2022

வாழ்த்துரை

தமிழ் உலகில் நாளும் நாளும் பூத்துவரும் புத்தம் புதிய இலக்கியவகை மலர்களுள் பிள்ளைத்தமிழும் ஒன்று. இது சிற்றிலக்கியச் செல்வங்களுள் அள்ள அள்ளக் குறையாத அழகுத்தமிழ்! இறைவனைத் தாலாட்டும் இன்பத்தமிழ்! இத்தகையப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் தன்னை ஈடுபடுத்திக் கொண்ட காரைக்குடி தனவணிகர் மெ.சண்முகம் அவர்களை நான் முதலில் பாராட்டுகிறேன்.

இனிமையும், மென்மையும் பெற்ற சொற்கள் நற்றமிழ் மொழியில் அமைந்து மரபுப் பாராட்டுகளாகத் திகழ்கின்றது. பொதுவாகப் பிள்ளைத்தமிழ் இலக்கியத்தில் 10 பருவங்களாகப் பாடப்படுவது வழக்கம். ஆனால், இந்நூலாசிரியர் வித்தியாசமாக 12 பருவங்களில் 121 செய்யுள்களைப் பாடியுள்ளார். 'மன்னரை முந்தியோர்' என்ற நூல் உங்களின் எழுத்துப் பயணத்தின் மைல் கல் எனலாம். தமிழில் மலர்ந்துள்ள நூற்றுக்கணக்கான இலக்கிய வகைகளில் 'பிள்ளைத்தமிழ்' என்னும் பிரபந்தம் சிறப்பாகச் சுட்டப் பெற்றுள்ளது.

வரலாற்றில் தம்பெயர் பொறித்துள்ள வேந்தரையும், மாந்தையும், குழவிப் பருவத்தவராய்க்கற்பித்து, அவர்தம் வீரதீரச் செயல்களையும் அருஞ் சாதனைகளையும், கொடைச்சிறப்பினையும், குணநலன்களையும், காப்பு முதல் சிறுதேர் முடியப்பத்துப்

பருவங்களில் கற்பனை வளம் செழிக்கவும் சந்தம் குலுங்கவும், புனைந்து பாடும் 'பாடாண்' இலக்கிய வகையினைப் பிள்ளைத்தமிழ் எனப் பெயரிட்டு வழங்கினர்.

தெய்வங்களைத் தலைமைப்படுத்திப் பிள்ளைத்தமிழ் பாடப்பெறுதல் உண்டு. பெரியாழ்வார், குலசேகராழ்வார் ஆகிய அருளாளர்கள் முறையே கண்ணன், இராமன் பாலப்பருவ நிகழ்வுகளை உளம் நெகிழப் பாடியிருப்பினும் கவிச்சக்கரவர்த்தி ஒட்டக்கூத்தர் பாடியுள்ள குலோத்துங்கச் சோழன் பிள்ளைத்தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர்களால் முதல் பிள்ளைத்தமிழ்ப் பிரபந்தமாகப் போற்றப் பெறுகின்றது.

பிள்ளைப் பாட்டே தெள்ளிதின் கிளப்பின்
மூன்று முதலா மூவேழ் அளவும்
ஆன்ற திங்களின் அறைகுவர் நிலையே!

எனும் நூற்பாவின் வழி பிள்ளைத்தமிழின் சிறப்பினை மேலும் அறிய முடிகிறது. இதனைப் போன்று தாங்கள் சுட்டியுள்ள படைப்பாக்கம் தனித்தன்மையுடனும், யாரையும் மனநோகச் செய்யா வண்ணம் அமைந்திருப்பது கூடுதல் சிறப்பாகும். தங்களின் பிள்ளைத்தமிழ் நூல் சிறக்கவும், செம்மொழிப் பருவத்தை செம்மொழி மகுடஞ்சூடும் விழா போல் எழுதப்பட்டுள்ள விதம் தமிழ் உலகில் பலரது பாராட்டுகளைப் பெறவும் இவ்வுலகம் வியக்கவும் தாங்கள் வாழ்வாங்கு வாழ்ந்து, இவ்வுலகிற்கு மேன்மேலும் பல அரிய, புதிய படைப்புகளைத் தந்துதவ, எல்லாம் வல்ல இறைவனை வேண்டி வாழ்த்துகின்றேன்.

வாழ்க படைப்புலகம்! வளர்க நின் புகழ்!

(இரா ர)

முனைவர். ச.இரவி
பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
தமிழ்த்துறை
தமிழ்நாடு மத்தியப் பல்கலைக்கழகம்,
திருவாரூர் – 610 005.



வாழ்த்துரை

தமிழ் இலக்கிய வரலாற்றில் 'தமிழ்விடு தூது' என்ற சிற்றிலக்கியத்தை அடுத்து பிள்ளைத் தமிழில் 'தமிழ் பிள்ளைத்தமிழ்' என்ற இந்த படைப்பு தமிழ் கூறும் நல்லுலகிற்கு மிகச்சிறந்த கொடையாகத் தமிழுக்குப் பெருமை சேர்க்கும் விதமாக, தமிழையே கருப்பொருளாகக் கொண்டு பாடி இருப்பது பாராட்டுதற்குரியது.

இந்நூல் தமிழுக்குப் புது வரவு, நூல் நெடுகிலிலும் ஆசிரியர் மெ.சண்முகம் அவர்களின் தமிழ்ப் புலமை வெளிப்படுகிறது. வணிகத்தைத் தொழிலாகக் கொண்ட அவரது தமிழ்ப் புலமை கவிஞர் கண்ணதாசனை நினைவுபடுத்துகிறது. இத்துணைக் கவித்திறன் ஆற்றலா? இவருக்கு எனவியக்க வைக்கிறது. தமிழின் மீது அவருக்கு இருந்த காதல் வெளிப்படுகிறது. இந்நூலைப் படித்தபோது, 'தமிழ் இனி மெல்லச் சாகும்' என்ற கருத்து நிலை பொய்த்துப்போகும் என்ற கருத்து நிலையில் நம்பிக்கை ஏற்படுகிறது.

மற்ற பிள்ளைத்தமிழில் இருந்து தமிழுக்கு என்று பாடப்பட்ட இந்த "தமிழ்ப் பிள்ளைத்தமிழ்" முற்றிலும் மாறுபட்டுத் தனக்கென ஒரு உத்தியை வைத்துக்கொண்டு அதாவது உயிரெழுத்துப் பன்னிரெண்டையும் முதல் எழுத்தாகக் கொண்டு, பத்துப் பத்துப் பாடல்களாகப் பாடி இருப்பதோடு கால வளர்ச்சிக்கேற்பக் கணினிப் பருவம், செம்மொழிப் பருவம் எனச் சேர்த்து 12 பருவங்களை 121 பாடல்களில் எழுசீர் ஆசிரியர் விருத்தத்தில் மரபு இலக்கணத்தைப் பின்பற்றிப் பாடி இருப்பது சிறப்புக்குரியது.

ஒவ்வொரு பருவத்திலும் அந்தப் பருவச் செய்திகளுக் கேற்பப் பறவைகள், வளையல்கள், தண்டைகள், கட்டில் தொட்டில்கள், மலர்கள், தோழியர், அரிசி, சோறு, மலைகள், கனிகள், நீர்நிலைகள், ஊஞ்சல்கள் என இவற்றைப் பத்துப்பத்தாகப் பாடியிருக்கும் அழகே தனி.

மேலும் பாடல்கள் அனைத்தும் இன்பியல் பாடல்களாகவே அமைந்திருப்பது இந்நூலுக்கு வளம் சேர்க்கிறது. சாதி, மத, இன வேறுபாடு காட்டாது, யாருடைய மனதையும் புண் படுத்தாது, தமிழின் பெருமை, ஆற்றல், வலிமை, வளமை, வரலாறு எனப்பாடி இருப்பது, தமிழுக்கு மணி மகுடமாக விளங்குகிறது. 21ஆம் நூற்றாண்டின் தொடக்க காலத்து வரலாற்றில் பேசப்படும் நூலாகத் தமிழ் பிள்ளைத்தமிழ் இருக்கும் என்பதில் எனக்கு மாற்றுக்கருத்தில்லை.

ஆசிரியரின் கவித்திறன், தமிழ்ப்புலமை, இலக்கண ஆற்றல் வரலாற்றுச் சிந்தனை இந்நூல் வழி வெளிப்படுகிறது. ஏற்கனவே 'மன்னரை முந்தியோர்' என்ற நூலை ஆசிரியர் வெளியிட்டுத் தமது புலமையை வெளிப்படுத்தி இருக்கிறார்.

இந்நூல் தமிழின் வரலாற்றுப் பெருமையைப் பேசுகிறது, சமூக நலன் பற்றி விளக்குகிறது. மூவேந்தர் பெருமை, தாயாகவும், சேயாகவும், தமிழைப் பார்த்ததோடு பேரக் குழந்தையாகவும் பார்த்து தமிழுக்குப் புதுமை சேர்த்திருக்கிறார் ஆசிரியர்.

காப்புப்பருவத்தில் எந்த ஒரு கடவுளைப் பற்றியும் பாடாமல் இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தில் இயற்கையைப் பாடி இருப்பது போல் ஆசிரியரும் இயற்கையையே காப்புப் பருவமாகப் பாடி இருப்பது எந்த ஒரு சமயச் சார்பும் இல்லாமல் தமிழ் அனைவருக்கும் பொதுவானது என்பதை இந்நூலில் ஆசிரியர் காட்டி இருப்பது சிறப்புக்குரியது.

"யாமறிந்த மொழிகளிலே, தமிழ் மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்ற பாரதியாரின் கனவை தமிழ் பிள்ளைத்தமிழ் வெளிப்படுத்தி இருக்கிறது. இதுபோன்ற எண்ணற்ற நூல்களை எழுதித் தமிழ்ச் சமூகத்திற்கு ஆக்கப்பூர்வமான பணிகளில் ஈடுபட்டுப் பெரும்புகழ் பெற ஆசிரியரை மனப்பூர்வமாக வாழ்த்துகிறேன்.

நன்றி

இப்படிக்கு

22/02/22

(ச.இரவி)

Dr. S. RAVI, M.A., M.Phil., Ph.D.,
Professor & Head, Dept. of Tamil,
Central University of Tamil Nadu,
Thiruvarur - 610 005.



கவிஞர் மா. கண்ணப்பன்
மேனாள் பேராசிரியர் &
தமிழ்த்துறைத் தலைவர்
டாக்டர் அழகப்பச் செட்டியார்
ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி
காரைக்குடி

வாழ்த்து மடல்

என் குழந்தாய் சண்முகமே! இங்கே வா! வா!
ஈடில்லாத் தமிழ்த்தாய் நான் கொஞ்ச வேண்டும்!
பின் என்ன? இதுவரைக்கும் என்னைப் பற்றி
எவரேனும் பிள்ளைத்தமிழ் பாடி னாரா?

மீனாட்சி, திருச்செந்தூர் முருகன் என்று
தேனாட்சி பிள்ளைத்தமிழ் பலவும் உண்டு
நானாட்சி புரிந்தாலும் என்னைப் பற்றி
பிள்ளைத்தமிழ் பாடியது நீ மட்டும்தான்!

அதுமட்டும் இல்லை தம்பி! மற்றும் ஒன்று
அன்னையாக எனைப் பற்றிப் பாடி யுள்ளார்;
மதலையாகப் பாடியவர் சிலபேர்; ஆனால்...
பேரப்பிள்ளை யாக என்னை நீதான் கண்டாய்!!

தாயாகச் சேயாகப் பேத்தி யாகப்
பாடுதற்குப் பத்துப்பருவம் போதாது என்று
வாயாரப் பன்னிரண்டு பருவம் பாடி
கணினியையும் விளையாட வாங்கித் தந்தாய்

பாண்டியர்கள் முதற்கொண்டு, பல்லோர் என்னைப்
பாராட்டிப் பல முடிகள் அணிவித் தார்கள்
வேண்டுகின்ற பொழுதினிலே ஈற்றுப் பாட்டில்
செம்மொழி... மகுடத்தைச் சேர்த்தாய் நீயே!

பன்னிரண்டு பருவங்கள் எனக்குத் தந்தாய்!
உயிரெழுத்து பன்னிரண்டால் துவங்கி வைத்தாய்!
பன்னிரண்டு உயிர்எழுத்தும் உன்றன் பாட்டால்
மெய் எழுத்தாய் ஆயிற்று! உன் தந்தை பேர்போல்

சண்முகமே, என்முகமே! என்னைப் பெற்ற
பிள்ளைத்தமிழ் நீ... அதனால் எனக்கு நீயே!
உண்மையான தாயாவாய்! இதுபோல் இன்னும்
உவமையிலாப் பலநூல்கள் "பெற்று" வாழ்க!

அன்புடன்

தமிழன்னை

14.02.2022



பன்னீர் உயிரும் காக்கும் தமிழ்

மதிப்புரை

காரைக்குடி கம்பன் கழகச் செயலர்

முனைவர் மு.பழனியப்பன்

தமிழ்த்துறைத் தலைவர்

அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி

திருவாடானை

தமிழ் மொழி நாளும் நாளும் வளர வேண்டுமானால் புதிய புதிய படைப்புகள் தமிழுக்கு வந்து சேரவேண்டும். தமிழில் புதிய படைப்புகள் தோன்றுவது என்பது மற்றொரு வகையான வளர்ச்சி. தமிழுக்குத் தூது பாடப்பெற்றிருக்கிறது. தமிழுக்குப் பிள்ளைத்தமிழ் பாடப்பெறாத குறையைப் போக்கும்வண்ணம் புதிய படைப்பு ஒன்று தமிழ் பிள்ளைத்தமிழ் என்ற பெயரில் கவிஞர் மெ.சண்முகம் அவர்களால் எழுதப்பெற்றுள்ளது.

தமிழைப் பெண்பிள்ளையாகக் கருதி அவர் பிள்ளைத்தமிழ் பாடுகிறார். தற்காலத்துக்கு ஏற்ற நிலையில் இந்தப் பிள்ளைத்தமிழ் பாடப்பெற்றுள்ளது. தமிழ் உயிர் பெற்று பெண் பிள்ளையாக வளருவதை இந்தப் பிள்ளைத்தமிழ் பாடுகின்றது. பெண்பாற் பிள்ளைத்தமிழ் என்ற நிலையில் அமையும் இப்பிள்ளைத்தமிழ் பல புதுமைகளையும் கொண்டுள்ளது. பன்னிரு உயிர் எழுத்துக்களையும் ஒவ்வொரு பருவத்திற்கும் பயன்படுத்தி காப்புப் பருவப் பாடல்கள் அனைத்தும் 'அ' என்ற உயிர் முதல் எழுத்தில் தொடங்கப் பெற்றுள்ளது. இதுபோன்று மற்ற உயிர் எழுத்துகளை முதலாக வைத்து ஒவ்வொரு பருவமும் பத்துப் பத்துப் பாடல்களைக் கொண்டு அமைக்கப்பெற்றுள்ளமை பெருஞ்சிறப்பு. அதிலும்ஔ என்ற எழுத்தை அதிகம் பயன்படுத்திய கவிஞர் மெ.சண்முகம் ஒருவராகவே இருக்க முடியும். ஔதாரி, ஔசீர, ஔடதம், ஔடும்பரம், ஔதாவில்,

ஔவை, ஔதசி, ஔசித்தி, ஔவியம், ஔபரிதிகம் என்று ஔ என்ற எழுத்தில் இத்தனைத் தமிழ் சொற்கள் இருப்பதைத் தமிழ் உலகிற்கு வெளிக்காட்டியுள்ளார்.

மிகத் தெளிவாக பிள்ளைத்தமிழ் இலக்கணங்களை ஆராய்ந்து அவற்றில் எவ்வகையில் புதுமை சேர்க்க இயலுமோ, தமிழுக்குப் பெருமை சேர்க்க இயலுமோ அதையெல்லாம் எண்ணி எண்ணிப் பிள்ளைத்தமிழ் பாடியிருக்கிறார் கவிஞர் மெ.சண்முகம், பெண்பாற்பிள்ளைத்தமிழின் வடிவத்தில் இரு பருவங்களை இணைத்துப் பிள்ளைத்தமிழ் வகையின் வளர்ச்சிக்கு அடிகோலியுள்ளார் கவிஞர் மெ.சண்முகம். கணினிப் பருவம், செம்மொழிப் பருவம் என்று இரு புதிய பருவங்களை இணைத்து அவர் புதுமை புரிந்துள்ள விதம் அருமை.

காப்புப் பருவத்தில் சிலப்பதிகார ஆசான் இளங்கோவடிகள் பின்பற்றிய இயற்கை வாழ்த்தினை இவரும் பின்பற்றியுள்ளார். பத்துத் தெய்வங்களைக் காக்கச் சொல்லிப் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவம் பாடுவது இயல்பு. இவர் இயற்கைப் பொருள்களையே காக்கச் சொல்லிப் புதுமை கண்டுள்ளார். கதிரவன், நிலவு, மழை, காற்று, புவி, கடல், மலை, நெருப்பு என்று இயற்கைப் பொருள்களெல்லாம் தமிழைக் காக்க வரிசையாக நிற்கின்றன. தமிழைக் காக்க முத்தமிழே வருகிறது. தமிழைக் காக்கத் தமிழ்ச் சான்றோர்கள் வருகிறார்கள். மூவேந்தர்கள் வருகிறார்கள். இப்படிக் காப்புப் பருவத்திலேயே தன் புதுமை எண்ணங்களைக் கவிஞர் மெ.சண்முகம் தந்துள்ளார்.

இதுபோன்று தமிழ் தூங்க அவர் தரும் கட்டில் வரிசை அருமை. பளிங்குக்கட்டில், சந்தனக்கட்டில், தங்கக்கட்டில், கயிற்றுக் கட்டில், வெள்ளிக்கட்டில் என்று தமிழைத் தாலாட்ட கவிஞர் வீட்டில் அத்தனை கட்டில்கள் இருக்கின்றன. மேலும் காஞ்சிபுரம் பட்டுச் சேலை, காரைக்குடி கண்டாங்கிச் சேலை, தர்மாபுரம் பட்டு, ஆரணிப்

பட்டு போன்ற பட்டுவகைகளும் தமிழுக்குத் தொட்டில் கட்டுகின்றன. கவிஞர் காரைக்குடியைச் சார்ந்தவர் என்பதால் காரைக்குடியின் கண்டாங்கியும் தமிழைத் தாங்குகிறது.

கவிஞர் ஓடாப் புலியார் வீடு என்ற அடையாளக் குறிப்பினைக் கொண்ட பரம்பரை சார்ந்தவர். அந்த முத்திரையும் இப்பிள்ளைத்தமிழில் இடம்பெறுகிறது.

'ஓடாப்பு லியாம்த மிழேஓடும் புலியாம்
அக்கணி னிமீது பயணித்
தோடிப்போ ராடிப் பார்பிடித் துத்தன்
இணையிலா முதற்கணி னிக்குப்
பாடமா னறவள் ளுவர்பெயர் கொண்ட
புகழ்திக ழும்கைக்க ணினிவாழ்
தமிழேத மிழேக ணினித்தமி ழேநீ
திறனாய்த்த ழைத்திடு வாயே' (பா.4)

என்னும் பாடலில் ஓடாப்புலி முத்திரை வருகிறது. ஓடும் புலி எனக் கணினிக்கு அடைபிறக்கிறது. கணினிப் பருவமும் இப்பாடலால் சிறக்கிறது.

தமிழுக்குத் துறைதோறும், துறைதோறும் பெருமை சேர்க்கும் படைப்பாளர்கள் வரிசையில் இக்காலத்தில் பிள்ளைத்தமிழ் எழுதித் தமிழ் வளர்ப்பதில் தன்னிகரிலா இடம் பெறுகிறார் ஓடாப்புலி மெ. சண்முகம்.

தானாகப் பாப் புனையும் ஆர்வமும், ஆற்றலும் பெற்ற அறிவியில் மாணவர் மெ.சண்முகம், இவரின் கவிப்புலமைக்குப் புலவர் ஆ.பழநி, கவிஞர் அர.சிங்கார வடிவேலன் போன்ற கவிஞர்கள் வழியமைத்துத் தந்துள்ளனர். அவர்களின் வழியில் அரிய புதுமை மிக்க நற்கவிதை நூலை கவிஞர் மெ.சண்முகம் அவர்கள் படைத்தளித்துள்ளார். அவரின் கவியாற்றல் பெருகித் தமிழ் செழிக்கட்டும்.



பதிப்பாளர் உரை

வல்லினம் மெல்லினம் இடையினம் என்ற மூவின எழுத்துகளையும் பாகுபாடின்றித் தன்னகத்தே கொண்டு விளங்குவது தான் நம் தமிழ் மொழி. தமிழ் மொழிக்குப் பிறப்புச் சான்றோ பிறப்பு வரலாறோ கூறுவார் உலகில் எவருமிலர். அத்தகு நம் சிறப்புடை மொழியைக் குழந்தையாக எண்ணி, முதன் முதலில் திரு.மெ. சண்முகம் பிள்ளைத்தமிழ் பாடியுள்ளார். இது ஒரு கன்னி முயற்சி. வழக்கமான பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குரிய பத்துப் பருவங்களோடு இக்காலத்திற்கேற்ற கணினி, செம்மொழி என்ற இரண்டு புதுப் பருவங்கள் சேர்த்து உயிரெழுத்துப் பன்னிரண்டு போல பன்னிரண்டு பருவங்கள் வைத்துப் பாடியுள்ளார்.

இந்நூலில் உள்ள பாடல்கள் அனைத்திலும் கண்ணே, மணியே, தேனே பாலே என்று மட்டும் திரும்பத்திரும்பச் சொல்லிக் கொண்டே இல்லாமல் தமிழின் சிறப்பு, வளமை, எதிர்காலத்தேவை, தமிழ் நாட்டின் சிறப்புகளான மலை, அருவி, நவரெத்தினம், பட்டு, பறவை போன்றன எல்லாம் பற்றி ஆசிரியர் ஆங்காங்கே குறிப்பிட்டுள்ளார்.

சமுதாயக் குறைபாடுகள், ஏற்றத் தாழ்வுகள் மாறி சமதர்ம சமுதாயம் அமைய விரும்புவதைக் குறிப்பிட்டுள்ளார்.

இறுதிப் பருவமான செம்மொழிப் பருவத்தில் நம் தமிழ்மொழி செம்மொழி என்ற உயர்நிலை அடைவதைப் பட்டாபிசேக வர்ணனைக் கதைபோலப்பாடி இருப்பது பேரழகு.

எங்கள் மணிவாசகர்ப் பதிப்பகம் மூலம் வெளியீடாகும் இந்நூலுக்குப் பற்பல பரிசுகள் கிடைக்கும் என்று உறுதியாக எண்ணி, ஆசிரியர் மெ.சண்முகத்தை வாழ்த்துகிறேன்.

சென்னை
2022.

அன்பன்
ச.மெ.மீனாட்சிசோமசுந்தரம்

தமிழ்!
பிள்ளைத்தமிழ்!!

(எழுசீர் ஆசிரிய விருத்தம்)

அ. காப்புப்பருவம்

அன்னையாம் தமிழுக் கும்பிள்ளை யாம்நான்
அவள்மீது பாடும்த மிழுக்கும்
முன்னவ னாம்செங் கதிரோனே நீவிர்
முன்வந்து துணையிருப் பீரே
கண்ணிரண் டாய்இ லக்கண முமிலக்
கியமும்கொண் டநற்திரா விடமாம்
கண்மணி யைக்கண் ணின்இமை போலக்
காப்பாயே காக்கும்ப ரிதியே! (1)

அகிலம்கு ளிரஆ தவன்மறை யக்கார்
இருள்சூழ வானெழும் நிலவே
முகில்கொண்ட வானம் போற்புகழ் கொண்ட
மொழியான குமரிக்கண் டத்து
மகிழ்வோடு முதல்இப் பிள்ளைக்க விகொள்ளும்
முதற்கரு உரிகொண் டகத்தியர் முதலில்
வகித்திட்ட தொல்காப் பியப்பழந் தமிழை
வாழவைப் பாய்பிள்ளை நிலவே! (2)

அள்ளித்தெ ளித்த ஆகாயத் துளிகள்
　　அணையிற்தேங் கிவெள்ளமாய்ப் பெருகித்
துள்ளிக்கு தித்துக் கழனிபு குந்து
　　துயரம்போக் கிமுற்றிய செந்நெல்
அள்ளிக்கு வித்து அறம்பல செழிக்க
　　அருந்துணை புரியும்மா மழையே
பிள்ளைத்த மிழாம்சிந் துவெளிநற் றமிழைப்
　　பிழையற என்றும்காப் பாயே! (3)

அண்டம்ந டுங்கிக் கிடுகிடுக் கசண்டம்
　　அங்கேமா ருதத்தோடு இருக்கோ
என்றுசிந் தையும் குழம்பியி ருக்க
　　ஏராளக் கண்கள்கா ணுமந்த
கொண்டல்காற் றைத்தென் னங்கீற்றோ டுநல்ல
　　கழனிவா சலிலேதென் றலொடு
முன்னைப்பெ ருமைகொள் காற்றேநீ எமது
　　மூவினத் தமிழைக்காப் பாயே! (4)

அச்சில்சு ழலும்ஆ ருயிர்கொண்ட கோளே
　　அருமையாம் பொறுமைபேர் பெற்றோய்
உச்சம்நீ சம்ஏற் றம்தாழ்வு மேடோ
　　அதளபா தாளமாய் உருளும்
அச்சில்மு டிகுடி குடிமுடி யாக்கி
　　ஈர்ப்பாம்சக் திபெற்றனை புவியே
மெச்சும்ஏ மதுயிர் மெய்யாம்முச் சங்க
　　மொழியைஎன் றென்றும்காப் பாயே! (5)

அலைதழு வுமோர்ஆ னந்தப்பே ரின்பம்
அற்புதம் அதிசயம் புவித்தாய்
நிலையாக நெடிது வாழநன் குகாத்தல்
நெடுங்கடல் நீயேஅன் றோஅந்
நிலைநீர்நெ டுநீரே பெருவணி கமுடன்
நெடும்பய ணம்பேருண் டிதந்து
கலைகள்ப லபெற்ற தாயாம்கற் காலக்
கற்பகத் தமிழைக்காப் பாயே! (6)

அருவியாய் அறனாய்ப் புனிதமாய் மலையாய்
உறைபனி யாய்உய ரமேயாய்ப்
பெருஞ்சம வெளியாய்ச் சிகரமாய் மேவும்
பேரிம யப்பெரு மலையே
உருக்கொண்டு பிராமி யஎழுத்தாய் நம்நா
டெங்கும்கோ லோச்சிய ஓலை
நறுக்குப்பெ ரியத மிழைநாளும் நல்ல
நின்னிலை போலக்காப் பாயே! (7)

அனலும்த ணலும்க ணகணக்க அனைத்தும்
ஆக்கும்ஆ யிரம்நாக்கு அனைத்து
மனமும்ப தைப தைத்துத்தி கைத்தே
மிரண்டுபோ கும்சொரூ பமேயாம்
மனத்தீபோக் கும்செம்பி ழம்பேசெஞ் சுடரே
மலையாளம் தெலுங்குகன் னடத்தைத்
தன்னிற்பி ரித்த தானாய்ப்பி றந்த
தனிப்பெரு மொழியைக்காப் பாயே! (8)

அந்தமும் ஆதி யுமில்லாத வடிவாம்
அழகுத்த மிழைஅளந் துகூற
வந்தசான் றோர்எண் ணற்றோர்அ வர்கள்
வடித்தத மிழோபல கோடி
தந்தத மிழோஉ லகறேித்தீங் கிலாஎந்
தமிழைஏந் தித்தாங்கிச் சுமந்து
வந்தது போலே இன்னும்நற் சான்றோர்
வந்துவந் துஎன்றும்காப் பீரே! (9)

அறம்போற்றி அரசாண் டுவீரம்உ ரமாகி
அருஞ்செயல் பலவாகி உலகிற்
பரந்துவி ரிந்து உழவாம்நற் றொழிலைப்
பாருக்குப் பழகிக்கொ டுத்த
மறத்தமிழ் வேந்தர் களேபுலம் மூன்று
மூவேந்தர் களேநீவிர் தமிழ்நம்
பரம்பரை யைப்பா ரினில்இன்னும் பரப்பிப்
புகழ்மாலை சூட்டிக்காப் பீரே! 10)

அகத்தியம் கூறும் இலக்கணம் மிகுந்த
அறிவுக்கு விருந்தேநற் செவிக்கு
அகலாத பேரின் பமேகளிப் பூட்டும்
அழகுநா டகமேமுத் தமிழே
புகழ்பெற்ற எம்மொ ழிபோல்எம்மொ ழிஉண்டு
பாங்கான முப்பண்பு கொண்டு
அக்கார ணமாய்வேண் டுகிறேன்முத் தமிழே
அன்பாய்எந் தமிழைக்காத் திடவே! (11)

ஆ. செங்கீரைப் பருவம்

ஆயிரம் பொன்பன் முறைதேடி னேனே
அாபர ணமும்நான்கொண் டேனே
ஆயினும் தன்சே யிக்குச்சோ றூட்டும்
அப்பேரே பெரும்பேரென் றெனும்என்
கையில்த வழும்கு ழவியேசெந் தமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பிஅன் னமேநீ
நற்செங்கீ ரையாடு வாயே! (1)

ஆண்டாண்டு காலம் தேடிக்கண் டசேயே
ஆராஅ முதேநற்சீம் பாலே
தேனாய்இ னிக்கும் என்செங்க ரும்பே
தீதான பிள்ளைக்க லிநீக்கத்
தோன்றிய தோன்றற் குழவியே தமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பிம யிலேநீ
நற்செங்கீ ரையாடு வாயே! (2)

ஆடிக்க ளித்தா னந்தக்கூத் தாடி
அக்கமும் பக்கமும் அத்தை
பாடிவ ரமாமன் மடியமர்ந் துமணிப்
பொன்னாலே காதுங்குத் திசுற்றங்
கூடிம கிழும்கு ழவியேபைந் தமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பிக்கு யிலேநீ
நற்செங்கீ ரையாடு வாயே! (3)

ஆதிநாள் தொட்டு அகங்குளி ரப்பேர்
அருமைப்பே றாம்பிள்ளைப் பேறு
மேதினி யிற்பெற் றுமேலான தன்கண்
மணிக்கழ காய்ப்பேருஞ் சூட்டி
ஓதிவ ழிகொள்ளும் குழவியே தமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பிவெண் புறாநீ
நற்செங்கீ ரையாடு வாயே! (4)

ஆறுகு ளமாடி ஆன்றோராஞ் சான்றோர்
அங்குமிங் குங்காணத் தேடி
ஆறாத துன்பம் அடைந்தேபெற் றசீரே
ஆருயி ரேதேனே அமுதே
மாறாஅன் புடைக்கு ழவியேமுத் தமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பிக்கி ளியேநீ
நற்செங்கீ ரையாடு வாயே! (5)

ஆகாறு பலகண் டுபோகாறும் ஆங்கே
அரிதாக்கிக் கட்டுச்சிட் டாகி
வாகான கட்டிலுக் குவலுவா னகயிர்
வயிரத்தா லேவுண்டு பண்ண
போகாம றுக்கும் குழவியே தமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பிச்செம் போத்தே
நற்செங்கீ ரையாடு வாயே! (6)

ஆனந்தப் பட்டு டுத்திஅ ழகான
அணியும்பூட் டிஅன்றலர்ந் தமலர்
வேண்டிக்கொ ணர்ந்து அங்கஞ்சூ டிதண்டை
வழியாலே என்னெஞ்சம் உதைக்கும்
கோன்போல்கு லம்வா ழும்பிள்ளைத் தமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பிப்பூஞ் சிட்டே
நற்செங்கீ ரையாடு வாயே! (7)

ஆருயிர் தந்த அன்னைக்கன் னையோ
ஓவிய மாய்வளை காப்புத்
தாரும்வை பவம்வைத் துசேய்புகுந் தகுடித்
தொன்மைபற் றிஅச்சேய்ஈன் றயெம்சீர்
பேருடைத் திருவு ருவாம்கன்னித் தமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பித்தேன் சிட்டே
நற்செங்கீ ரையாடு வாயே! (8)

ஆழிய லையோ டூழிப்போ ராடி
அக்கரை யிற்கொண்டு விற்று
வீழாத பொருளால் மகளின்ம கவுக்கு
விளையாட்டுப் பெட்டிவே வெடுப்பார்
வாழ்த்தும்நற் பேரக் குழவியே தமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பிச்செங் குருகே
நற்செங்கீ ரையாடு வாயே! (9)

ஆடலும் பாட லும்சேர்ந்து றவாட
ஆடிய பாதம்தே டியோடி
ஊடலுங் கூட லும்தம்மில் மறந்து
ஊரேசுற் றும்தீதில் பருவம்
ஆடநா டும்கு ழவியேவண் டமிழே
காலாட்டி நின்தலை தூக்கிக்
கையின்இ சையெ ழுப்பிப்பூ நாராய்
நற்செங்கீ ரையாடு வாயே! (10)

இ. தாலப்பருவம்

இதழோரம் அமுதூ ரத்தேனூ றும்சொல்
ஓூடேஅம் மாயென்பா யேநற்
பத்திய முந்தான் கொண்டுபத் துமாதம்
பொறுத்திருந் துபெற்றசேய்த் தமிழே
எத்திசை யும்ப ரந்துமி டுக்காய்
என்றும்வாழ்ந் திடவேப ளிங்குக்
கட்டிலில் தாலே லோதாலே லோகண்
மணியேதா லேலோதா லேலோ! (1)

இந்தியத் தாய்த லைமக ளேநீ
எனையீன்ற தமிழ்மக ளேநற்
சந்தமும் திணையும் தொடையும்ஐம் பாலும்
சேர்ந்தேஅ ணியும்செந்த மிழேநீ
அந்தாதி இல்லா மூலமா மொழியே
அன்புக்கு ழந்தாய்சந் தனமாங்
கட்டிலில் தாலே லோதாலே லோகண்
மணியேதா லேலோதா லேலோ! (2)

இங்குமங் குமோடி எங்கெல்லா மோநான்
அலைந்துதே டியுங்காண லையே
தங்கமா னஎந்த மிழில்மதஞ் சாதி
தாங்கிவ ரும்இனப் பேரை
அங்கன்றோ மிளிர்கின் றாய்சம தர்ம
அன்னையாய் தங்கமே தங்கக்
கட்டிலில் தாலே லோதாலே லோகண்
மணியேதா லேலோதா லேலோ! (3)

இறுகிய மனங்கொண் டுமனிதப் போர்வை
யிலேமெத்தப் பணங்கொண்டு சித்தம்
நொறுங்குவார் நெருங்க வொண்ணாஅ ரிதேயாம்
நிம்மதிப் பேரின்பம் நெருங்கும்
அருங்குணத் தார்அ கம்வாழும் தமிழே
அவர்ஆழ்ந்து றங்கும்நற் கயிற்றுக்
கட்டிலில் தாலே லோதாலே லோகண்
மணியேதா லேலோதா லேலோ! (4)

இல்லம்கு தூக ளிக்கவெள் ளம்போல்
இன்பம்கூ டிவரயில் லாமை
இல்லாமல் எங்கும் போகநா டெங்கும்
அன்பும்அ றமும்உற வாட
நல்லநா டும்பே ரும்கொண்ட தமிழே
நின்குணம் போன்றபால் வெள்ளிக்
கட்டிலில் தாலே லோதாலே லோகண்
மணியேதா லேலோதா லேலோ! (5)

இஞ்சிள லுமிச்சை இதமான இளநீர்
இனிக்கும்ப தனிமணிச் சோளம்
தஞ்சம்பு குந்த எள்மணிக் குன்று
தரணிகாக் கும்தயா ளநோக்கம்
பஞ்சம்போக் கும்நெல் வயல்கொள்தீந் தமிழே
பார்போற்றும் காஞ்சியாம் பட்டுத்
தொட்டிலில் தாலே லோதாலே லோகண்
மணியேதா லேலோதா லேலோ! (6)

இறைநிலை கண்ட முதன்மொழி யேநின்
இயல்பென்றும் இளமையே திருவா
திரைக்களி தந்து களிப்புட னேநான்
தருவேன்பு துமையாம்பெண் விழாவே
குறைவிலாக் காரை யம்பதி கோயில்
கொண்டநீ அவ்வூர்க்கண் டாங்கித்
தொட்டிலில் தாலே லோதாலே லோகண்
மணியேதா லேலோதா லேலோ! (7)

இருபுற மும்தோ ரணம்கோலா கலமாம்
ஆலவட்டம் கொண்டாட்டம் ஊரே
வருகின்ற பொங்கல்வி ழாவாம்
வாரிஇ ரைத்துவாழ்த் துவரே
பெருவய தோர்உ னைக்கொண்டு தமிழே
பாங்காய்த்தர் மாபுரம் பட்டுத்
தொட்டிலில் தாலே லோதாலே லோகண்
மணியேதா லேலோதா லேலோ! (8)

இரண்டல்ல மூன்றல் லபதினா யிரமாம்
 ஆண்டுகொண் டபழமொ ழியேஉன்
அறம்பொருள் இன்பம் வீடுபே றுனக்கோ
 அற்புத மாம்நாலு வேதம்
புறம்என்றும் அகம்என் றும்பொருள் தந்து
 பகரும்நீ ஆரணிப் பட்டுத்
தொட்டிலில் தாலே லோதாலே லோகண்
 மணியேதா லேலோதா லேலோ! (9)

இங்கிலாந் திலங்கை மலேசியா பாங்காக்
 ஆத்ரேலி யாஅமெ ரிக்கா
சிங்கப்பூர் கனடா மியான்மர்நன் னார்வே
 சிறந்தோங்கும் செருமணி துபாயும்
அங்கன்றி உலகெங் கும்வாழும் தமிழே
 உளங்குளிர்ந் துலகத்தார் மனமாந்
தொட்டிலில் தாலே லோதாலே லோகண்
 மணியேதா லேலோதா லேலோ! (10)

ஈ. சப்பாணிப்பருவம்

ஈராறு யிருடன் மூவாறு மெய்யும்
    இணைந்திலங் கிநாவாறப் பாட
சீரான செல்வ மேநற்செல் வத்துள்
    செல்வமே செல்வத்தேன் மொழியே
பாராளும் நீஅப் பாஎன்பா யேஊர்
    புகழஆ லோலம்பா டும்நீ
வைரவ ளைய லிட்டுச்சாஞ் சாடித்
    தமிழேசப் பாணிகொட் டுகவே! (1)

ஈன்றெடுத் தநாள்அ றியாநான்அ றிந்த
    அருள்மொழி யேதமி ழணங்கே
வானோங்கும் மொழிம லையேம லைவாழ்
    வடிவேநல் அழகின்சி ரிப்பே
தேனிசைத் துப்பாட் டெழுதும்பண் பான
    தண்புல வர்பொன்னா வாழ்ந்து
ஆனிப்பொன் வளைய லிட்டுச்சாஞ் சாடித்
    தமிழேசப் பாணிகொட் டுகவே! (2)

ஈன்றன ளேஇ யற்கையாம் அன்னை
இத்தான்தோன் றீசுவ ரியான
தேன்தமி ழைக்க லைகள்ப லதந்து
தேம்பாவ ணிபோல்இனித் துநல்ல
மான்போல்துள் ளும்ம கிழம்பூவாம் தமிழை
மின்னுகின் றமுறப்புக ழோடு
வாண்கண்ணா டிவளை யலிட்டுச்சாஞ் சாடித்
தமிழேசப் பாணிகொட் டுகவே! (3)

ஈவதற் குக்க டையேழு வள்ளல்
ஈந்துபோ தாதெனப் புடைசூழ்
பாவேந்தர் பலதந் ததென்தமிழ் மொழியே
பாராள நம்மறை மலையார்
காவல்போல் நற்த வங்கொண்டோர் பலரும்
காத்துத்த ளைத்தவ ளேநீ
பூவால்வ ளைய லிட்டுச்சாஞ் சாடித்
தமிழேசப் பாணிகொட் டுகவே! (4)

ஈருட லுமோரு யிராய்என்றும் வாழும்
அறமாம்ஒ ருவனுக்கொ ருத்தி
பேருண்மை கூறும் குடும்பப்பண் பாடு
பார்போற்றும் நன்னெறி தீதில்
வீரம்வ ளர்க ணவர்அன்பிற் கவரும்
வடிவுடை யாள்கற்பு தவழ
சீர்பாசி வளைய லிட்டுச்சாஞ் சாடித்
தமிழேசப் பாணிகொட் டுகவே! (5)

ஈடற்ற குறள்கொண் டவள்ளுவம் தந்து
    இணையற்ற உலகநெ றிகொண்டு
நாடாள்மன் னனும்நா டுவாழ்மக்க ளும்இந்
    நாநிலம் போற்றிக்கூ டிவாழ
ஓடிக்க டலாறு கண்டுல கெங்கும்
    ஆட்சிகோ லோச்சிய வளேநீ
ஆடும்சிப் பிவளை யலிட்டுச்சாஞ் சாடித்
    தமிழேசப் பாணிகொட் டுகவே! (6)

ஈத்தம்ப ழம்நித் தம்கொள்வார் சித்தம்
    இறுகிக்கட் டுடலாவார் உலகில்
சாத்திய மான வாக்கத்த னைக்கும்
    சத்தம்கொ டுத்துவைத் தியமே
காத்துநல் லசித்து விளையாடும் சித்தர்
    கண்டமா மருந்தேசத் தியமே
சாதிக்காய் வளைய லிட்டுச்சாஞ் சாடித்
    தமிழேசப் பாணிகொட் டுகவே! (7)

ஈட்டிகைக் கொண்டு ஈட்டிய நாடும்
    இன்னல்மு தலானதொ ழில்நுண்
கோட்பாடும் வெட்ட வெட்டச்சொல் லுதேஎம்
    கீழடி ஆதிச்ச நல்லூர்
கூட்டான அரிக்க மேடக ழாய்வு
    கூர்மைமின் னும்மின்ன லேநீ
காட்டுப்பூ வளைய லிட்டுச்சாஞ் சாடித்
    தமிழேசப் பாணிகொட் டுகவே! (8)

ஈசல்போற் பெருகி னும்மொழி எல்லாம்
இன்பத்த மிழ்போல்ஆ காது
வாசலாம் வாய்வ ழிவந்தாலும் வரியாம்
வடிவமி லாமொழி யுமுண்டு
வேசமிட் டுமயக் கும்மொழி யூடே
வந்தினிக் கும்நீஏ லக்காய்
வாசமொ டுவளை யலிட்டுச்சாஞ் சாடித்
தமிழேசப் பாணிகொட் டுகவே! (9)

ஈரல்ஒ துக்கி இடங்கொடுத் துத்தான்
உண்டதில் பாதியுங் கொடுத்துச்
சீரான காற்றா லேமூச்சுங் கொடுத்துச்
சேயிக்கு முந்நாடி பார்த்துக்
கூறாலே நோயும் நாடிவைத் தியரே
காணாது வைத்தியம் பார்க்கச்
சீர்வண்ண வளைய லிட்டுச்சாஞ் சாடித்
தமிழேசப் பாணிகொட் டுகவே! (10)

உ. முத்தப்பருவம்

உறவாடக் கண்ணே உருவான பெண்ணே
உலகாளப் பிறந்தாயே தகுதிச்
சிறப்புப்ப தினாறும் பெற்றுமே நாடு
சென்றுமே லோங்கிநின் றுநல்ல
உரமான காப்பி யமாம்ஐந்தும் போற்றி
ஊர்வளர்த் துப்பேர்கொண் டுமுகம்
பார்த்துமுத் தந்தா அமுதேத மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (1)

உழவேநம் தமிழர்க் குயிரேஅவ் வுயிர்க்கே
உணவூட்டும் உலகாளும் தொழிலே
தொழிலோப லகோடி ஆயினும் உழவே
தொடக்கம் பலவும்அ டக்கம்
உழவுப டிஅளந் துகுடியும் உயர
உளமேக சிந்துரு கிமுகம்
பார்த்துமுத் தந்தா தேனேத மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (2)

உலகில்ஆ திமனி தன்மனங் கூறும்
உணர்வைஆங் கேவெளிப் படுத்த
வழங்கிய விளிக்கு றிசைகைக்கு றியாகி
வழிவழி வந்தேஒ லியாகி
உலகில்மொ ழியாகி அதிலேமு தலாகி
உயர்ந்தநீ மகிழ்ந்துரு கிமுகம்
பார்த்துமுத் தந்தா மணியேத மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (3)

உச்சிமு கர்ந்து கூந்தலும் வருடி
உறவுக்கு நல்வர வுசொல்லிப்
பச்சிளங் குழந்தை தொட்டிலில் உறங்கப்
பசியாறச் சோறூட்டி மூலர்
கச்சித மாய்ச்சொல் லிவைத்தசெவ் வழியும்
கண்டுவாழ் வாங்குவா ழுமுகம்
பார்த்துமுத் தந்தா அழகேத மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (4)

உளமுரு கத்தே னொழுகிநம் வையம்
உய்யவ ழிகூறும்தே வாரம்
வளம்கூறும் திருவா சகம்மெய்யே எங்கும்
வாழும னிதம்வாழப் பாரோர்
உளம்கண்ட பூங்கா வனமாம்நற் தடாகம்
என்றும்குன் றாதிருக் கமுகம்
பார்த்துமுத் தந்தா அன்பேத மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (5)

உயர்வான எந்த மிழ்என்ற சொல்லின்
ஒப்பற்ற பொருளோநல் லிளமை
அயராத எளிமை நீர்மைஎன் றல்லோ
இம்முப்பொ ருளும்இணைந் துகூடி
முயலாது வந்த முத்தமிழ்ச் சுவையே
மூதுரை யேஎம துமுகம்
பார்த்துமுத் தந்தா ஆசைத்த மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (6)

உலகமொ ழியெல்லாம் எழுத்தொன்றே கொள்ள
எண்ணும்எ ழுத்தும்கண் களாகிக்
குலப்பக் குவம்கொண் டதுநம்மொ ழியொன்றே
காணும்பி றமொழியில் எண்கள்
இலவேஇ துவன்றோ நம்சிறப் பிலொன்று
இதுபோல இன்னும்பெ றமுகம்
பார்த்துமுத் தந்தா கண்ணேத மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (7)

உரம்பாய்ந்த தமிழுக் குத்தஞ்சை யில்நெல்
எடுத்துக்கா துகுத்தித்தோட் டுக்கோ
மறமது ரையி லேமுத்துந் தொடுத்து
மறுகுவ லம்வர வேஅத்
தரணிபு கழ்சே ரக்களி றுங்கொள்
தனமேசெம் மலரேவந் துமுகம்
பார்த்துமுத் தந்தா செல்வத்த மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (8)

உயராறு பழமொ ழிவையத்துள் வழக்கில்
இலாலத்தீன் எபிரேகக் கிரேக்கம்
வயதான வாய்தி றவாவட மோடு
வேறுகி ளைசூழ்சீ னமுடன்
உயிர்கொண்ட தன்னி லைமாறாத் தமிழும்
அப்புக ழோடென துமுகம்
பார்த்துமுத் தந்தா கன்னித்த மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (9)

உயிர்வாழ இலக்க ணம்பெற்று நல்ல
இலக்கிய மேசஞ்சீ வியாகி
உயரப்ப றந்து சிரஞ்சீவி யாகி
உட்பொரு ளுக்கிலக் கணமும்
அயராது தந்த அகிலத்தில் உயர்ந்த
ஒருமொழி யேஎன துமுகம்
பார்த்துமுத் தந்தா செல்லத்த மிழேஉன்
முக்கனி வாயால்முத் தந்தா! (10)

ஊ. வாரானைப் பருவம்

ஊதிக்கு ழல்த ருவேன்கிலு கிலுப்பை
ஒன்றும்த ருவேன்மேனாட் டுப்போப்
பாதியி லேத னைத்தந்தார் உனக்கு
பஞ்சாமிர் தம்போல்நற் றமிழே
மேதினி யில்சத் தம்ஒலித் துவர
மணித்தண்டை குலுங்கவே வருகச்
சாதிம லரேவ ருகநம்த மிழரின்
சக்தியே வருகவ ருகவே! (1)

ஊர்வேறு என்றா லும்'யாதும் ஊரே'
எல்லோரும் 'யாவரும் கேளிர்'
கூறினாரே குன்ற னார்அன்றே நன்றாய்க்
காசினி யேசொந்த மென்று
வாரிவ ழங்கும் பாரிவாழ் தமிழே
வெண்தண்டை குலுங்கவே வருக
நாரத்த மலரே வருகநம் நாடு
நலம்பெற வருகவ ருகவே! (2)

ஊழியம் வாங்கி ஊதியம் என்ற
ஒருசிறு பொருளாலே சாதிப்
போலிப்ப ழியால்சிக் கியவரோ இங்கு
பாவப்பட் டபாமர ராம்அப்
பாழ்நீங்கி அவரோ பளிச்சிடத் தமிழே
பொன்தண்டை குலுங்கவே வருகத்
தாழைம லரேவ ருகசம தர்மம்
தழைக்கவே வருகவ ருகவே! (3)

ஊற்றான இலக்கி யங்களு ருவாக
உறுதுணை இலக்கண மேஅவ்
வூற்றான இலக்கி யம்வலு வான
வாழ்க்கைஇ லக்கையி யம்பும்
நாற்கலை யோடு கூடத்த மிழேநீ
நெடுந்தண்டை குலுங்கவே வருகக்
கோரைம லரேவ ருகநம்த மிழரின்
குரலோங்க வருகவ ருகவே! (4)

ஊருண்ண ஊர ணிபோல்உல குண்ண
அளவிலா அறநூல்ப லதந்து
பேருகொண் டாயே உலகுநீ என்று
பேரான நன்னூல்நா லடியார்
சீருகொள் வள்ளு வம்கொன்றைத் தமிழே
செந்தண்டை குலுங்கவே வருக
வேரலை மலரே வருகநம் நாடு
வளம்பெற வருகவ ருகவே! (5)

ஊக்கம்த மிழரின் ஊனில்க லந்து
உதிரமே ஆனது விண்ணில்
தாக்கும்ஏ வுகணை யும்வானம் பொழியும்
தேன்மழை யும்கோள்கொள் வழியும்
நோக்கும்முக் கால முணர்வார்கொள் தமிழே
நற்தண்டை குலுங்கவே வருகக்
காக்கண மலரே வருகநம் நாடு
காத்திட வருகவ ருகவே! (6)

ஊசிநு ழையா யிடமாம்நம் தமிழர்
உள்நுழை யுமிடத்தில் நீயும்
பேசிம கிழ்வாய் உறவுபோல் கூடிப்
பழகுவாய் ஆம்கலை பரப்பிப்
பாசிம ணியாய்க்க லகலக்கும் தமிழே
பூந்தண்டை குலுங்கவே வருக
வாசிம லரேவ ருகநம்த மிழரின்
வளம்கூட வருகவ ருகவே! (7)

ஊதுகு ழலாலே அடுப்பூதும் பெண்ணே
உனக்கெதற் குப்படிப் பென்று
போதாஅ றிவோடு பேசியோர் வியக்கப்
பெண்ணடி மைபோக்கிக் காணும்
போதுவந் தபுது மைப்பெண்ணே தமிழே
புதுத்தண்டை குலுங்கவே வருகத்
தீதிலா மலரே வருகநம் பெண்டிர்
திறம்பெற வருகவ ருகவே! (8)

ஊர்க்குரு விபருந் தாகுமா வானில்
உயரப்ப றந்தாலும் ஆகா
ஊற்றான நம்த மிழும்கரு டனாகும்
இவ்வுல கில்நாம்நன் குவாழ
ஆற்றுப்ப டைகூ றும்தமி ழணங்கே
இசைத்தண்டை குலுங்கவே வருகச்
சூரல்ம லரேவ ருகதமி ழரென்றும்
சிறக்கவே வருகவ ருகவே! (9)

ஊதைக்காற் றுகுளி ரூட்டஉ டலோடு
உள்ளமும் நடுநடுங் கும்அப்
போதைப்பொ ழுதேயாம் மார்கழி யும்போய்ப்
போகியும் போய்ப்புது வருடப்
பாதையும் பொருளும் தாரும்தைத் தமிழே
பசுந்தண்டை குலுங்கவே வருகக்
கைதைம லரேவ ருகதமிழ்க் கல்வி
கோலோச்ச வருகவ ருகவே! (10)

எ. அம்புலிப் பருவம்

என்னதான் கதிர வன்ஒளி தரினும்
அவன்வெம்மை எம்மைச்சு டுமன்றோ
வெண்வட்ட நிலவே உன்குளு மைஅவ்
வெம்மைத ணிக்கும்மா மருந்தே
பொன்னொளி யேஎன் தமிழ்அழைக் கிறாளே
பூப்போல வாவிளை யாட
மின்னும்பி றைஅ ழகேமுழு நிலவே
முன்வந்து விளையாடு வாயே! (1)

என்றுமே பஞ்சு வெண்ணிறங் கொண்டு
உனைவென்றா லும்தீஅ துக்கு
என்றுமே அஞ்சா துஆயின்எத் தீயும்
அழிந்துகு ளிருமேஉன் னாலே
வெண்ணொளி யேஎன் தமிழ்அழைக் கிறாளே
விருப்புடன் வாவிளை யாட
வெண்முத்தே வடிவ ழகேமுழு மதியே
வீறுடன் விளையாடு வாயே! (2)

எண்ணவொண் ணாவிண் ணிலேஎழுந் தாடும்
அன்னப்ப றவையேஅ ணங்கே
மின்னுகின் றமாணிக் கமேகலா நிதியே
மதிவாழும் குழவிக்குத் தோழீ
கண்ணொளி யேஎன் தமிழ்அழைக் கிறாளே
களிப்புடன் வாவிளை யாட
வண்ணப்பைங் கிளியே தன்னிகர் இலாலே
வாஞ்சையாய் விளையாடு வாயே! (3)

என்மீது கோப மாஎன்ம களான
அருந்தமிழ் மீதுகுற் றமாசொல்
வெண்ணில வேஏன் வரவில்லை வந்தால்
வெள்ளைப்ப னியாரமும் நல்ல
மணகோல மும்தேன் குழலும்நான் தருவேன்
திண்ணலாம் வாயென்கி றாள்என்
பொன்னான மகள்அ தற்காக நீவா
பெண்ணேவந் துவிளையா டுவாயே! (4)

என்னதான் அவள்கேட் டாலும்அ வளுக்கு
இல்லையெ னாதுத ருவேனே
இன்றோஅ வள்கேட் பதுநீஅ வளுடன்
ஓடிம கிழவேண்டு மென்று
அன்பாலே தலையாட் டிப்பொம்மை தருவேன்
ஆடலாம் வாயென்கி றாள்என்
அன்புக்கோ மகள்அ தற்காக நீவா
அறிவேவந் துவிளையா டுவாயே! (5)

எப்பொழு தும்மு ழுமதியா யிருக்க
ஏற்றவ ழியோடும ருந்தும்
இப்பாரில் ஆத வனைஎப்பா டுபட்டும்
இரவுக்குத் தள்ளிநீ என்றும்
எப்போதும் பகலாளச் செய்வேன்
ஆள்பலர் உளர்என்கி றாள்என்
தப்பிலா மகள்அ தற்காக நீவா
தவமேவந் துவிளையா டுவாயே! (6)

எச்சரிக் கைஎச் சரிக்கைஏய் மதியே
இனிச்சொல்ல ஏதுமில் லைநீ
இச்சம யம்வ ராவிடில் என்ன
என்னசெய் வேன்பார்வெண் ணிலவே
மிச்சமே இல்லா துஉன்னிறம் போக்க
மின்னும்கண் மைஊற்று வேன்உன்
உச்சந்த லையில் என்றாளே மகவு
அதனாலே வந்துவி டுடனே! (7)

எச்சரிக் கைஎச் சரிக்கைம தியிலா
இரவுவாழ் வியேதேய்ந்து வளரும்
ஒச்சப்பி றவியே உடனேவந் துவிடு
இல்லாவிட் டால்உன்னை நல்ல
கொச்சக்க யிற்றாற் கட்டுவேன் கட்டிக்
குத்தவும் செய்வேன்என் கிறாளே
பச்சக்கு ழந்தை என்தமிழ் மகவு
புரிந்ததா வந்துவி டுடனே! (8)

எங்கிருக் கிறாய்எங் கிருக்கிறாய் நிலவே
எங்கிருப் பினும்அவள் அறிவாள்
எங்குலக் கொழுந்தாம் தமிழ்அமு தகண்ணீர்
ஆறாய்ப்பெ ருகியானை குளித்து
தங்கமா னவளு ருகித்தன்கூ டமாறா
தன்போடு விளையாடும் திருடன்
அங்கேபி டிபடும் காவல்நண் பனாலே
உனைச்சிறை பிடிக்கிறா ளேபார்! (9)

எங்கிருக் கிறாய்எங் கிருக்கிறாய் ஒளியே
ஒழிந்தாலும் மறைந்தாலும் உன்னை
அங்குவந் துசிறை பிடிக்கும்நல் லாற்றல்
அவளுக்குண் டுதப்பித்துப் பார்உன்
அங்கம்தாங் குமாநல் லழகென்ன வாகும்
என்னன்புத் தமிழ்மக ளோஎன்
சிங்காரப் பட்டா சுத்துப்பாக் கியேந்தி
சுடுகிறா ளேடுமீல் டுமீலே! (10)

ஏ. நீராடற் பருவம்

ஏருழ வுத்தி ருநாட்டில்உ ழைப்பும்
உயர்வேழ்மை யுமுயர்விக் குறையோ
மாறிநல் மாண்பு டைத்தமி ழேஉன்
மக்களெல் லாருஞ்ச மமாகி
மேரும லைபோ லஉயர ஆறாம்
மேற்காவே ரிநீராடி நீதி
ஊற்றாகித் தேனா றுதண்புன லாடி
உளமாற நன்னீரா டுகவே! (1)

ஏப்பம்விட் டனரே மேநாட்டார் வேண்டாம்
ஒழுக்கம்என் றுசொல்லிவேண் டாமா
பூப்போன்ற இப்பண் புநமக்கப் புகழ்கொள்
பண்புடை உயிரெப்ப வுமிப்பே
ணைப்பற்றிக் காக்க ஒப்பற்ற தமிழே
அப்பாலா றுநீராடி நல்ல
தைப்போற்றித் தேனா றுதண்புன லாடித்
தங்கமாய் நன்னீரா டுகவே! (2)

ஏராள மாய்நோய் களுண்டுபோக் கிடவோ
எமக்கிங்கே மாத்திரை கிடைக்கும்
தாராள மாய்த்தே வையின்றி ஆனால்
தமிழேஒ லிக்கும்கா லத்தைத்
தீரநி றுக்கும் தராசாய்மாத் திரையும்
தந்தநீ கோதாவ ரிநீராடித்
தீர்க்கமாய்த் தேனா றுதண்புன லாடித்
தயங்காது நன்னீரா டுகவே! (3)

ஏற்றம்இ றைத்து நாற்றங்கால் நட்டு
இறுகிய உடலும்நெ கிழ்ந்த
கூறுகொள் நெஞ்ச முங்கொண்டு சிறந்த
குடவோலை முறைகண்ட ரசாட்சி
போற்றிய நல்லோர் தந்தத மிழேநீ
பொற்குற்றா லநீராடிப் பாரே
போற்றிடத் தேனா றுதண்புன லாடிப்
பூப்போல நன்னீரா டுகவே! (4)

ஏர்கொண்டு எழில்கூட் டும்நற்ப டைப்பு
எண்ணுதற் கெட்டாத கலையின்
பேரழ குகல்லி லேகைவண் ணமான
பெருங்கோட்டை கல்லணை கண்டு
தீராத தாகங் கொள்தமி ழருளத்
தமிழேதிற் பரப்புநீ ராடிக்
கார்மேகத் தேனா றுதண்புன லாடிக்
களிப்புடன் நன்னீரா டுகவே! (5)

ஏறுமு களண்கள் எங்குமே காண்பீர்
ஆயின்இ றங்குமு களண்கள்
கூறாழப் பிரிந்து தமிழன்றி எங்கும்
கண்டிலோம் இக்கூறா ழங்கொள்
வேரான தமிழே தோழிய ரோடு
வான்ஆகா யகங்கைநீ ராடி
வீறுடன் தேனா றுதண்புன லாடி
வனப்புடன் நன்னீரா டுகவே! (6)

ஏகாதி பத்தி யமேராளங் கொண்டு
எந்தஞ்சை சரசுவ திமகால்
ஏக்கத்தா லேஎட் டிநாடுபி டித்து
ஏட்டுச்சு வடிகொண்டு சென்று
கூக்குர லாற்கோ லோச்சும்மே நாட்டார்
கலங்கும்நீ வங்கக்க டலாடி
ஊக்கமாய்த் தேனா றுதண்புன லாடி
ஆனந்த நன்னீரா டுகவே! (7)

ஏன்எதற் குஎன்று கேட்கத்தன் மனமோ
ஆழமா குமென்றநூல் அறிவு
தான்எழுந் தியலா குமுன்னேமா ணிக்கத்
திருவாசர் புல்லேபூ டாகத்
தோன்றும்ப ரிணாமம் மொழிந்தாரே அதுகொள்
தமிழேநீ அரபிக்க டலாடி
மேன்மையாய்த் தேனா றுதண்புன லாடி
மிடுக்குடன் நன்னீரா டுகவே! (8)

ஏனோக லைஅ றுபத்துநா லாயி
அட்டமா சித்திகூ டினும்மே
லானஇ றவாக்க லைக்கும ணமோஅ
லையுது அக்கலை யுந்தா
வானம்போல் வாழ்வுந் தாதமி ழேநீ
வாகாய்இந் துமாக்கட லாடி
கோனாகித் தேனா றுதண்புன லாடிக்
கொடிபோல நன்னீரா டுகவே! (9)

ஏனைய செம்மொ ழிகளோதொ டர்பே
இன்றிப்ப லகாலம்போ காங்கே
தோன்றாது போன திலக்கியம் ஆயின்
தமிழேஉன் நிலைகட்டிக் காக்கத்
தூண்போல எம்மைப் பற்றிக்கொண் டநீயோ
தானாய்ச்சம் பவூத்துநீ ராடிச்
சேனையோ டுதேனா றுதண்புன லாடிச்
சாந்தமாய் நன்னீரா டுகவே! (10)

ஐ. சிறுசோறாக்கற் பருவம்

ஐயமிட் டுண்ணென் றுசொல்லும்முத் தமிழே
அன்பும களேதோழி யர்நீர்
ஐயிரு வர்கூ டிநாமாக்கு வோமே
அன்பாலே கூட்டாஞ்சி றுசோறு
தூயமல் லியரி சிதருவோம் நாமே
தயக்கமின் றிமுதலா கதிலோ
நீயேநற் சர்க்க ரைச்சாதஞ் செய்ய
சிறுசோறு சமைக்கவா ரீரே! (1)

ஐம்புலன் அடக்கும் வித்தையிற் சிறந்து
அற்புதம் படைத்தக லையை
யாம்பெற வைத்த தமிழேதோ ழிசிகப்பி
எடுத்துத்தந் தநவரா அரிசி
சாம்பார்சா தமாய்த்த யாராகப் பொங்கல்
செம்புப்பா னையிலே வைக்க
வீம்புபே சாத அன்புத்தோ ழிகளே
சிறுசோறு சமைக்கவா ரீரே! (2)

ஐம்பூதம் அளந்து இயற்கைநாட் டியமாம்
அடங்காத பேரழி வோடு
நாமறி யாத லட்சோப லட்சம்
நிகழ்வும்காட் டும்தமி ழேஉம்
சோம்பலி லாத்தோ ழிஅழகி தந்த
சிறுமணி யாம்நல் லரிசிதான் கொண்டு
நாமுண்ண மணக்கும் தயிர்ச்சாதஞ் செய்ய
சிறுசோறு சமைக்கவா ரீரே! (3)

ஐம்பெருங் குழுவும் எண்பேரா யமும்தம்
அரசிற்கொண் டுநல்லாட்சி செய்து
நாம்குடி யொன்றி வாழவ ழிகாட்டும்
நற்றமி ழேஆரு யிரேஎன்
கோமக ளேஉம்தோ ழிவள்ளி
கொழித்துத்தந் தசிவப்ப ரிசியில்
சீம்பால்போற் கற்கண் டுச்சாதஞ் செய்ய
சிறுசோறு சமைக்கவா ரீரே! (4)

ஐந்தொகை கண்டால் நம்நிலை தெரியும்
அந்நிலை தெரிய நமக்கு
ஏந்திவந் தேநி திநிலைஅ றிக்கை
எடுத்துக்கூ றும்கணக் குவழி
பாந்தமாய்த் தந்த தமிழேதோ ழிதெவ்வி
பாங்காய்த்தந் தபூங்கார்அ ரிசியில்
காந்தமாய் ஈர்க்கும் புளிச்சாதஞ் செய்ய
சிறுசோறு சமைக்கவா ரீரே! (5)

ஐங்குர வர்போற் றிஅவர்வ ழிபோற்றி
ஆனந்த வெள்ளம்பெ ருகிட
ஆங்காங்கே செழுங்க லைசெழித் தோங்க
ஐவகை ஒழுக்கம்தான் கொண்ட
பாங்குடைத் தமிழே தோழியாம் பொன்னா
பார்த்துத்தந் தசீர கச்சம்பா அரிசி
ஓங்கிப்பொங் கிநற்தேங் காய்ச்சாதஞ் செய்ய
சிறுசோறு சமைக்கவா ரீரே! (6)

ஐந்துண்டி யாலே அறுசுவை கண்டு
அளவோடுண் டுஆழ உறங்கிமுன் னெழுந்து
மோந்துநீ ராடிச் சாந்தஉ ளமோடு
மனிதன்வாழ் வாங்குவாழ்ந் தோங்கக்
காந்திம யவழி தந்தத மிழேஉம்
கண்ணாம்தோ ழிவள்ளியா தந்த
சேந்தினை யில்மி ளகுச்சாதஞ் செய்ய
சிறுசோறு சமைக்கவா ரீரே! (7)

ஐயந்திரி பறவே அறங்கூறி நீதி
ஆள்அர சன்தானும் குடியும்
தூயவ ழியிலொப்ப நோக்கவே வந்த
தோன்றலாம் மனுநீதி வாழும்
சேய்த்தமி ழேஉம் நற்றோழி ஆசை
சேர்தெய்வா தந்தநல் லரிசித்
தூயக வுனியில் பால்சாதஞ் செய்ய
சிறுசோறு சமைக்கவா ரீரே! (8)

ஐம்பூதங் களில்ஒன் றானபூ மிக்கு
எத்தனை துன்பந்தந் தாலும்
தாமுள்ளே வைத்துப் பொருப்பபோல் நீயும்
தாங்குகி றாய்ஆயின் பிறவோ
நாமேவீ ழச்செய் யுமப்புகழ் தமிழே
நற்றோழி இந்துதந் தசம்பா
வாமரி சியில்நெய்ச் சாதஞ்செய் திடவே
சிறுசோறு சமைக்கவா ரீரே! (9)

ஐம்புல நுகர்ச்சி அள்ளித்த ருமெந்த
அருமொழி யுமுண்டோஇப் பாரில்
நாம்கொண்ட மொழிபோல் என்றாலில் லையே
நெல்லாய்வி ளையும்தண் டமிழே
பூமணங் கொண்ட தோழிக ருப்பி
பகிர்ந்துதந் தமூங்கில ரசியில்
தேமது ரமாய்ச்சம் பாச்சாதஞ் செய்ய
சிறுசோறு சமைக்கவா ரீரே! (10)

ஒ. ஊசற் பருவம்

ஒப்பனை யாய்மஞ் சள்நிறப் பட்டு
டுத்திக்கண் மணியாம்தேன் மொழியே
ஒப்பிலா மலர்வி ழியேஎன்பொன் மகளே
இலக்கண மேதமிழ் மணியே
தப்பிலாச் சிறும லைக்கொடி யாகித்
தகக்கும்பொன் னூஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீஆ டுகவே! (1)

ஒளிறும்சு டர்வி ளக்கேசெக் கநிற
அழகுப்பட் டுடுத்திக் கவின்மல ரேகண்
விழியேஇ தழமு தேஎன்மண் மகளே
வரிவடி வாம்தமி ழிசையே
களிதாரும் கொல்லி மலைக்குயி லாகிக்
கோமேத கவூஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீஆ டுகவே! (2)

ஒத்தம னங்கொண்டு தமிழர்கூ டிவாழ
எத்தனை யோஅ றநூல்கொண்ட தமிழே
முத்துநி றப்பட் டுடுத்திம லர்ந்த
முகங்கொண்ட எந்தமிழ் நிலவே
கொத்தும லராய்க்கோத் தகிரிம லையில்
கருநீல ஊஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீஆ டுகவே! (3)

ஒலித்தேஉ லகரங் கிற்தனித் தொருசொல்
லிடங்கொண்ட நிகரிலாத் தமிழே
நிலவேநீ லப்பட் டுடுத்திநி மிர்ந்தே
நீதிஉ ருக்கொண்ட தாயே
நல்லேல கிரியில் ஆடும்ம யிலாகி
நற்பவ ளவூஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீஆ டுகவே! (4)

ஒருகோடி ஒன்ன லர்கூடி னாலும்
என்றும்அ சையாவண் டமிழே
புற்பச்சை நிறப்பட் டுடுத்தித்தி லகமும்
பதித்தமங் கைத்தமிழ் மலரே
பர்வத மலையில் கார்மேக மாகிப்
பெருவைர ஊஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீஆ டுகவே! (5)

ஒன் றுகூ டிநாடு விடுதலை பெறவே
ஆருயி ரும்வீர முழக்கம்
எண்ணற்றும் தந்த சுதந்திரத் தமிழே
இளம்பச்சை நிறப்பட்டு டுத்தி
மின்னும்தே னிமலை வானம்பா டியாகி
மாணிக்க ஊஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீ ஆ டுகவே! (6)

ஒருமைப்பா டெனுஞ்சொல் லுக்குச்சா திமத
இனங்கடந் துதமிழர் என்று
பொருள்தரும் தமிழே அரக்குநி றத்தில்
பட்டுடுத் தித்தமிழ் எழிலே
மருந்துவாழ் மலையில் தேன்கனி யாகி
மரகத ஊஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீ ஆ டுகவே! (7)

ஒய்யாரப் புகழ்பா டிநாவார மெய்யே
ஒலிக்கும்பு லவர்தம்நா வாழும்
மெய்த்தமி ழேசாந் தநிறத்தில் மினுக்கும்
மென்பட்டு டுத்திமுத் தமிழே
பயமிலா மேக மலைக்கி ளியாகிப்
புட்பரா கவூஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீ ஆ டுகவே! (8)

ஒருமிக்கச் சங்கம் முதல்ஐந்து காலம்
உணர்த்தும்கா லக்கண்ணா டியான
பெருந்தமி ழேநற் குங்கும நிறத்தில்
பட்டுடுத் திமதுரத் தமிழே
வருசநாட் டுமலை வண்ணம லராகி
வைடூரி யவூஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீஆ டுகவே! (9)

ஒருசேரத் தாயன் பும்நாட்டுப் பற்றும்
உளதைச்சொல் லுமெமுளக் குறியே
நறுந்தமி ழேஈ யநிறப்பட் டுடுத்தி
நன்னில வாந்தமிழ் வேணீ
சருகும லைம ரகதப்பு றாவாய்
சாதிமுத் தூஞ்சல்ஆ டுகவே
ஆடுக ஊஞ்சல் ஆடுக வேஎம்
அழகேத மிழேநீஆ டுகவே! (10)

ஓ. கணினிப் பருவம்

ஓகையு டன்நாம் காணும்பு திதான
இப்பரு வம்தமி ழாலே
தோகைவி ரிக்க வன்மென்பொ ருளுமே
தானுள்ளீ டுசெயலாக் கிவெளி
யாக்கும்நல் மின்ன னுசாதனக் கணினி
யாம்முதல் தனிக்கணி னியேவாழ்
தமிழேத மிழேக ணினித்தமி ழேநீ
திறனாய்த்த ழைத்திடு வாயே! (1)

ஓராட்டுப் பெற்ற தமிழேசீ ராட்ட
உனக்குக்க ணினிவந்து டலேயாம்
சீரான கணினிக் குநீஉயி ராகிச்
செழித்தெங்கும் எதிலும்க ணினியாய்ப்
பாராளும் கணினி யாகிக்க டவுச்சொல்
போற்றும்நல் மேசைக்க ணினிவாழ்
தமிழேத மிழேக ணினித்தமி ழேநீ
திறனாய்த்த ழைத்திடு வாயே! (2)

ஓடிஓ டிச்செய் தகாலம்போய் ஓய்ந்த
மர்ந்துசெய் யுங்காலந் தந்த
கோடியு யர்க ணினியாமா யகலை
கூறுகொண் டறுபத்தி யைந்து
ஆடிப்பொ டியாக்கி உலகத்தைச் சுருக்கி
எடுத்தசி றுமடிக்க ணினிவாழ்
தமிழேத மிழேக ணினித்தமி ழேநீ
திறனாய்த்த ழைத்திடு வாயே! (3)

ஓடாப்பு லியாம்த மிழேஓடும் புலியாம்
அக்கணி னிமீதுப யணித்த
தோடிப்போ ராடிப் பார்பிடித் துத்தன்
இணையிலா முதற்கணி னிக்குப்
பாடமா னறவள் ளுவர்பெயர் கொண்ட
புகழ்திக ழும்கைக்க ணினிவாழ்
தமிழேத மிழேக ணினித்தமி ழேநீ
திறனாய்த்த ழைத்திடு வாயே! (4)

ஓர்ச்சியே செய்யத் தமிழேநீ கண்ட
உன்பரி ணாமம்மொ ழிவழி
சீர்சித்தி ரம்வ ரிசெப்பேடாம் ஓலைச்
சுவடிகா கிதம்தற்கா லத்திற்
கேற்றக ணினியாய்ப் பேர்கொண்ட வடிவாம்
கையடக் கக்கணி னியேவாழ்
தமிழேத மிழேக ணினித்தமி ழேநீ
திறனாய்த்த ழைத்திடு வாயே! (5)

ஓராயி ரங்கற் றவர்என்றா லும்நாம்
அவரைக்கற் றதுகைமண் ணளவப்
பேரார்கல் லாத துகணினி அளவு
போல்வழக் குமாறுமிந் நாளில்
ஆறாவ திணைய வழித்தலை முறையை
அழைக்கும்வ ழுங்கண்க ணினிவாழ்
தமிழேத மிழேஇ ணையத்த மிழேநீ
திறனாய்த்தன் முனைப்புக்கொள் வாயே! (6)

ஓர்அஞ்சற் பெட்டி போலிருந் திட்ட
எந்திரக் கணினிதந் திரமாம்
ஓரிணை யத்தா லேவலை தளங்கொண்
டிணைத்தர சினுத்த மத்தால்
ஒரொருங் குதரம் பெற்றதே அப்பேர்
கொள்பணி நிலையக்க ணினிவாழ்
தமிழேத மிழேஇ ணையத்த மிழேநீ
திறனாய்த்தன் முனைப்புக்கொள் வாயே! (7)

ஓர்மையு டன்நான் அழைப்பேன்என் தமிழை
இனிநாலு தமிழென்று அதற்குக்
காரணி கணினித் தமிழேக ணினியே
கடலாயி னுமீடாகா தன்றோ
தேர்ந்தபு கழ்த மிழுக்கும்த மிழர்க்கும்
தரவேகொண் டபெருங்க ணினிவாழ்
தமிழேத மிழேஇ ணையத்த மிழேநீ
திறனாய்த்தன் முனைப்புக்கொள் வாயே! (8)

ஓவியக் கணினி யுமதன்பிள் ளையாம்
அழகுத்தி றன்பேசி யும்நம்
பாவிம னதிளைப் பாறத்தா ரும்பற்
பலசமூ கவலைத ளங்கள்
கூவிக்கு விப்ப தில்நாம்நன் மையே
கொண்டுவா ழஅணிக்க ணினிவாழ்
தமிழேத மிழேஇ ணையத்த மிழேநீ
திறனாய்த்தன் முனைப்புக்கொள் வாயே! (9)

ஓங்குபு கழ்க ணினிஒரு மொழியே
அறிந்தது அதற்கிரு மயெண்ணே
யாங்கொடுக் கும்கு றியீடது கொண்டு
நம்மிலக் கணம்அக ராதி
ஆங்குமின் னாகி டாகுமே நற்தன்
முனைப்பம்மீத் திறன்கணி னியேவாழ்
தமிழேத மிழேஇ ணையத்த மிழேநீ
திறனாய்த்தன் முனைப்புக்கொள் வாயே! (10)

ஔ. செம்மொழிப் பருவம்

ஔதாரி யங்கொண் டதமிழே இந்த
இப்பிள்ளைத் தமிழ்ச்சிறப் பைநம்
காதில்தொல் காப்பி யர்சொல்கி றாரே
குழவிம ருங்கினும் கிழவ
தாகுமென் றிக்கூற் றுகொள்தொன்மைப் பொருளே
தமிழேமூ லமாம்வரி வடிவே
ஆகாஎ ழுந்த ருளுமொலி வடிவே
செம்மொழி யேவாழ்க நிதமே! (1)

ஔசீர மாம்செம் மொழியாச னமேற
அணங்கேத மிழேகலை களோடு
பேசியே உணர்த்தும் பேரிலக் கியங்கள்
பிணைத்துக்கட் டிக்கருத் தாழம்
பூசிய பன்னெ டுந்தமி ழேசொற்
பொருளோசை போற்றும்தூ யவளே
கூசாது பழகித் தனித்துநின் றவளே
செம்மொழி யேவாழ்க நிதமே! (2)

ஔடத மாம்த மிழேநீகல் லாத
அன்பர்க்குத் தேனமு தேயாம்
சூடம்போற் சிந்திக் கும்மேதை யர்க்குச்
சமூகம்த னிமனிதர் செங்கோல்
சூடும்வல் லரசு மூன்றுமு யர்ந்த
சீர்தூய்மைத் தொன்மைப்பொ துமைத்தாய்க்
கோட்பாடுங் கொள்நீ திவாழ்த்தனித் தமிழே
செம்மொழி யேவாழ்க நிதமே! (3)

ஔடும்ப ரம்பொன் னுக்குறு திதரும்
அதுபோல நாங்களெல் லோரும்
கூடித்த மிழுக்கும் தமிழ்மணக் குமெங்கள்
குடும்பவி ழாவாம்அம் மகுடஞ்
சூடும்வி ழாவுக் கும்துணை யிருந்து
சிறப்பித்தோம் தொடங்கிய தேவாழ்த்
தோடேதொ டங்கி யதேசெம்மொ ழிவிழா
திகழ்ந்ததே இப்பார்போற் றிடவே! (4)

ஔதாவில் தாயே அமர்ந்துவ ரயெங்கும்
ஆனந்தம் நாட்டியம் ஆடப்
போதாதென் றுமுழங் குமைமுக முழவம்
பேருழ வுப்பட்டு டுத்தித்
தீதிலாத் தமிழ ருளம்கழுத் துருவே
ஆகிஅன் னையெழுந் தருள
ஆதவன் கைகூப் பிவணங்கி வாழ்க
செம்மொழி வாழ்கஎன் றானே! (5)

ஔவையாந் தமிழன் னைநம்த மிழரின்
அளவிலா வீரத்தால் திலக
ஓவிய மிட்டுக் கலையேநல் வாலாய்
இலக்கிய மேகோலாய்த் தாங்கிப்
பௌவிய மாய்வ ரவள்வாழ்த்தே முழங்கப்
பல்லாயி ரங்கோடித் தமிழர்
பாவும்பா டிக்கூ டிமகிழ்ந்து வாழ்க
செம்மொழி வாழ்கஎன் றனரே! (6)

ஔபரி திகத்த ரணிச்செம்மொ ழிகளும்
அச்சான்றோர் களும்நம்மொ ழியிலே
பூப்போலப் பிரிந்த மொழிகளு மிருக்கப்
பண்பாடு போற்றும்க லையாம்
பேரரங் கில்லெட் சோபலெட் சம்நற்
றமிழ்வளர்த் தசான்றோரும் கூடிச்
சேர்ந்துவ ரவேற்று எல்லாரும் வாழ்க
செம்மொழி வாழ்கஎன் றனரே! (7)

ஔதசி யம்மு தலானமங் கலஞ்சூழ்
அரங்கில்மு ழங்கும்வாழ்த் தூடே
மூத்தத மிழ்ச்சான் றோரொரு வர்தம்
மனதாற வாழ்த்திச்செம் மொழியாம்
மேதினி புகழ்ம ணிமுடியெ டுத்து
மற்றொரு பெருந்தமிழ்ச் சான்றோர்
நீதிவாழ் கையில் கொடுக்கவாங் கியவர்
செம்மொழி வாழ்கஎன் றாரே! (8)

ஔசித்தி யம்ப லபெற்றநம் மன்னை
அரங்கேறி வணங்கிப்பெற் றனளே
தேசிய முடியாம் செம்மொழி மகுடம்
தலைநிமிர்ந் தேறின ளேநற்
காசினி புகழ்செம் மொழிச்சிம்மா சனமே
கரவொலி கேட்டத ரங்கில்
ஆசியும் வாழ்த்தும் மிதந்தது வானில்
செம்மொழி வாழ்கவாழ் கவென்றே! (9)

ஔவியம் கொள்ளு மளவிருந் தவிழா
அரங்கமே மலர்தூவித் தமிழே
நீவாழ்க நின்முத் தமிழ்வாழ்க என்றும்
நீவாழ்க நின்பேரு வாழ்க
நீவாழ்ந்து நின்னா டும்வாழ்க வென்றும்
நாவாற வாழ்த்தநம் மன்னை
ஓவிய மாய்த்தந் தாள்நன்றி பலவே
வாழ்கசெம் மொழிவாழ்க நிதமே! (10)



மெ.சண்முகம் சிவகங்கை மாவட்டம் காரைக்குடியைச் சேர்ந்தவர். இவர் 20.11.1967-இல் பிறந்தார். இவரது தந்தையார் பெயர் மெய்யப்பன். தாயார் பெயர் முத்தாத்தாள். மனைவி பெயர் நாச்சம்மை. இவருடைய மகன் பெயர் மெய்யப்பன் மறுமகள் பெயர் ரேவதி.

இவர் இளங்கலை விலங்கியல் படிப்பை தேவகோட்டை ஸ்ரீ சேவுகன் அண்ணாமலைக் கல்லூரியில் படித்து, 1988-இல் கல்லூரி முதல் மாணவனாகத் தேர்ச்சி பெற்றவர், பின்பு அழகப்பாப் பல்கலைக்கழகத்தில் B.Ed., படித்து முதல் வகுப்பில் தேர்ச்சி பெற்றார்.

இவர் அறிவியல் பாடத்தில் பட்டம் பெற்றாலும் தமிழின் மீது கொண்ட ஆர்வத்தால் மேற்படிப்புப் படிக்க எண்ணித் தயாரித்து வைத்த 'நாட்டுக் கோட்டை நகரத்தார் வாழ்வியல் நாகரிகம்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரைத் தொகுப்பை 'மன்னரை முந்தியோர்' என்ற நூலாக 17.07.2005-இல் வெளியிட்டுள்ளார், இதில் உள்ள ' பேரன் பிறக்கோணும்' என்ற ஆராய்ச்சிக் கட்டுரை பற்பலரின் பாராட்டுகளைப் பெற்றது.

இந்த நூல் தமிழுக்குப் பிள்ளைத் தமிழ் இல்லையே என்ற வெளிப்பாட்டின் படைப்பு என்று ஆசிரியர் கூறுகிறார்.

எழுசீர் ஆசிரியர் விருத்தத்தில் பாடப்பட்டுள்ள இந்நூல் பிள்ளைத் தமிழ் நூல்களில் மைல் கல் ஆகும்.

இவர் முழுநேர வணிகராக இருந்தும் தமிழ் இலக்கண மரபுப்படி கவிதைகள் புனைவது வியப்புக்குரியது!